இந்த நிலையில்-கிட்டத்தட்ட அந்தப் பாலம் கட்டி 200 ஆண்டு கள் ஆகிவிட்டன. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் போக்குவரத்து நிலையை முன்னிட்டு அதை மாற்றித் தருவார் களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்த இடத்தை நேரில் பார்த்து அது தேவை என நான் உணர்ந்தால், பிறகு அரசு அதைப்பற்றி பரிசீலிக்கும்.

ஊனமுற்ற அரசு ஊழியர்கள் மாற்றம்.

* *8106*—திரு. மு. முகமது சித்திக் :

மாண்புமிகு சமூகநலம் மற்றும் ஊரகத் தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

ஊனமுற்ற அரசு ஊழியர்களை மாவட்டம் விட்டு மாவட்டம் மாற்றல் செய்வதை அரசு தடை செய்யுமா?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

பொதுவான சில காரணங்களைத் தவிர்த்து உடல் ஊன முற்றவர்களை மாவட்டம் விட்டு மாவட்டம் இப்போது மாற்று வது இல்லை. இதற்கென்று தனியாக அரசு ஆணை பிறப்பிக்க வும் தேவையில்லை.

திரு. மு. முகமது சித்திக் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஊனமுற்ற அரசு ஊழியர்களை மாவட்டம் விட்டு மாவட்டம் மாற்றுவதால் அவர்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள். அப்படி மற்ற மாவட்டத்தில் பணி புரிகின்ற அந்த அரசு ஊழியர்கள் அவர்கள் சொந்த மாவட்டத் திற்கு வந்து பணிபுரிவதற்கு மனுச் செய்தால் அதில் சில சட்டச் சிக்கல்கள் காரணமாக காலதாமதம் ஏற்படுகிறது. இரண்டு மாவட்ட ஆட்சித் தலைவர்கள் ஒப்புதல் கொடுப்பதிலும் தாமதம் ஏற்படுகிறது. இப்படிப்பட்ட அந்த தாமதங்கள் நேராமல் செய்து, அவர்கள் துரிதமாக அந்த மாவட்டத்திலிருந்து சொந்த மாவட்டத் திற்கு வருவதற்கு வழிவகையை அந்த உடல் ஊனமுற்றவர் களுக்கு செய்ய அரசு ஆவன செய்யுமா என கேட்க விரும்பு கிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பொதுவாக பதவி உயர்வு பெறுகின்ற நேரத்தில் அந்தப் பதவி அந்தக் குறிப்பிட்ட மாவட்டத்தில் இல்லை என்றால் அடுத்த மாவட்டத்திற்கு

அவர்களை மாறுதல் செய்ய வேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது. இரண்டாவது, நிர்வாகக் காரணத்தினால் மாற்ற வேண்டிய சூழ் நிலை ஏற்படுகிற நேரத்தில் மிகவும் ஆலோசித்த பிறகுதான் அவர் களை அந்த இடத்தில் நாம் பணியில் அமர்த்துகிறோம். மாவட்ட ஆட்சித் தலைவர் இடத்திலே காலதாமதம் ஏற்படுமானால் சமூக நல இயக்குநருக்கு அவர்கள் அக்குறையை எடுத்துச் சொல்லி குறையை நிவர்த்தி செய்து கொள்வதற்கான வாய்ப்பைப் பெறலாம்.

ஆதரவற்ற குழந்தைகள் பராமரிப்பு இல்லங்கள்.

*9994—திருமதி யசோதா செல்லப்பா :

மாண்புமிகு சமூகநலம்மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழக அரசின் சார்பில் நடத்தப்படும் ஆதரவற்ற குழந்தைகள் பராமரிப்பு இல்லங்கள் எத்தனை?

(ஆ) எந்த அடிப்படையில் ஆதரவற்ற குழந்தைகள் சேர்த் துக்கொள்ளப்படுகிறார்கள் ?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : தமிழ்நாட்டில் அரசால் 22 ஆதரவற்ற குழந்தைகள் பராமரிப்பு இல்லங்கள் நடத்தப்படுகின்றன. அந்த இல்லங்களில் 5 வயது பூர்த்தி அடைந்த மாணவ, மாணவிகள், தாயோ, தந்தையோ இல்லாதவர்கள் சேர்த்துக்கொள்ளப்படு கிறார்கள்.

திருமதி யசோதா செல்லப்பா : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆதரவற்ற குழந்தைகள் பரா மரிப்பு இல்லங்களில் இருக்கும் குழந்தைகளுக்கு என்னென்ன சலுகைகள் வழங்கப்படுகின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

10-20 மணி

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆதரவற்ற குழந்தை கள் பராமரிப்பு இல்லங்களில் தங்கியிருக்கின்ற குழந்தைகளுக்கு இலவச உணவு, இலவச உடை, பாடப் புத்தகங்கள், குறிப்பேடு கள், மருத்துவ உதவி மற்றும் கல்வி அளிக்கப்படுகிறது. ஒன்று முதல் ஐந்தாம் வகுப்பு வரை அந்த இல்லத்திலேயே அவர் களுக்குக் கல்வி வழங்கப்படுகிறது. ஐந்தாம் வகுப்பிற்குமேல் அருகிலுள்ள அரசுப் பள்ளிகளுக்கு அனுப்பப்பட்டு, பள்ளி இறுதித் தேர்வு வரையில் அவர்கள் அங்கே தங்கிப் பயிலுவதற் கான வாய்ப்பினை வழங்குகிறோம்.